[2nd August 1966

வழங்கப்படும் மானியம்; எல்லாவற்றிற்கும் ஒரே மாதிரியாக இருப்பதால், அதிக எண்ணிக்கை உள்ள பஞ்சாயத்தில் அதிகமான அபிவிருத்தி வேலைகள் செய்ய முடியாத நிலை இருப்பதால், அதிகமான பஞ்சாயத்துக்கள் இருக்கும் ப்ளாக்குகளாகப் பிரிக்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்திற்கு உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: மூலக் கேள்வியிலிருந்து இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

III.—ADJOURNMENT MOTIONS.

(1) PROMULGATION OF ORDER UNDER SECTION 144, Cr. P.C.

MR. SPEAKER: The hon. Member Sri M. Kalyanasundaram has given notice of an adjournment motion *re.* the issue of orders under section 144 Cr.P.C.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, நமது சட்டசபை கூடுகிறபோதெல்லாம் சட்டசபைக்கு வரும் வழியில் யாரும் கூடக் கூடாது என்று போலீசார் தடை உத்தரவு பிறப்பிக்கிறார்கள். இது நம்முடைய சட்டசபையையே அவமதிக்கிற மாதிரி இருக்கிறது. என்னுடைய 15 வருட சட்டசபை அனுபவத்திலே, இந்தச் சட்டசபையை நடத்த முடியாமல் ஜனங்கள் தடுத்த நிகழ்ச்சியைப் பார்க்கவில்லை. வேறு எங்கே எப்படி இருக்குமோ அது எனக்குத் தெரியாது. அப்படியிருக்கும் போது, நம்முடைய ராஜ்யத்திற்கு மட்டும், இந்தச் சபைக்கும், நம்முடைய மக்களுக்கும் கேவலத்தைத் தேடும் முறையில், ஒவ்வொரு தடவையும் சட்டசபை கூடும்போதெல்லாம் போலீசார் தடை உத்தரவு பிறப்பிப்பதானது மிகவும் கேவலமாக இருக்கிறது; நம்முடைய மக்களை அவமதிப்பதாக இருக்கிறது; மக்கள் பிரதிநிதிகள் எப்படி வேலை செய்கிறார்கள் என்று பார்க்கவும் அவர்களிடத்தில் முறையீடுகளைத் தெரிவிக்க வேண்டும் என்றும் தனியாகவோ சேர்ந்தோ வருபவர்களுடைய, அதுவும் அமைதியான முறையில் வர விரும்புகிறவர்களுடைய சுதந்தரத்தைப் பறிப்பதாக இருக்கிறது. ஆகவேதான், இந்தத் தடை உத்தரவிற்கு அவசியம் இல்லை, இந்தத் தடை உத்தரவை ரத்து செய்யவேண்டும் என்பதை இந்தச் சபையின் மூலமாகக் கனம் முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்காகத்தான் நான் சபையின் அலுவலை ஒத்திவைத்து இந்த விஷயத்தைப் பற்றிப் பேசவேண்டும் என்று விரும்புகிறேன்.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டமன்றக் கூட்டத்தைப் பார்க்க வருகின்றவர்களுக்குத் தடை ஒன்றும் இல்லை. ஆனால் கூட்டமாகக் கூடக் கூடாது, சட்ட

2nd August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

சபைக்கு வருகின்றவர்களைத் தடுக்கக்கூடிய காரியங்களைச் செய்யக் கூடாது என்பதற்காகத்தான் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அது நிர்வாக தோரணையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு. இம்மாதிரி உத்தரவுக்கு அவசியமே இல்லை என்று சொல்ல முடியாது. முன்பு மேல்சபைக்கு வந்து கொண்டிருந்த ஒரு அங்கத்தினர் சபைக்கு வர முடியாமல் தடுக்கப்பட்டதும், மறிக்கப்பட்டதும் நமக்குத் தெரியும். அதற்குள் யாரும் அதை மறந்திருக்க மாட்டார்கள். அதுபற்றி மேல்சபையில் ஒரு உரிமைப் பிரச்சினையே ஏற்பட்டது. எப்படியும் இந்த உத்தரவு, சட்டமன்ற செயல்முறைகள் நல்லவகையில் நடைபெற வேண்டும் என்ற அடிப்படையில் போலீஸ்காரர்களின் நிர்வாக தோரணையில் பிறப்பிக்கப்பட்ட ஒன்றாகும். ஆகவே, இது ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உகந்தது அல்ல என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Mr. SPEAKER: I withhold my consent to the hon. Member to raise an adjournment motion on this subject.

(2) EVICTION OF AGRICULTURISTS IN VANAVASI PAKKANAD FOREST AREA, SALEM DISTRICT

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் வனவாசி பக்கநாடு என்ற இடத்தில் உணவு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 600 விவசாயக் குடும்பங்கள் கடந்த சிலபல வருஷங்களாகச் சாகுபடி செய்து வருகிறார்கள். அந்த நிலம் பாரஸ்ட் இலாக்காவுக்குச் சொந்தமானது, அவர்கள் அதைக் காலி செய்ய வேண்டும் என்பதுதான் தகராறும் இருந்து கொண்டிருக்கிறது. இதைப்பற்றி அந்த விவசாயக் குடும்பங்களுக்கும், பாரஸ்ட் இலாக்கா, ரெவின்யூ இலாக்கா ஆகியவற்றுக்கும் தகராறு, பேச்சுவார்த்தை எல்லாம் இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் போலீஸ்காரர்களை இரவோடு இரவாக அனுப்பி, அந்த விவசாயிகளைக் கைது செய்து போலீஸ் வான்களில் ஏற்றி தொப்பூர் கணவாய் போன்ற இடங்களில் கொண்டு போய் விட்டிருப்பதும், அவர்களது வீடுகளை அழித்து, இடித்து நெருப்பை வைத்துக் கொளுத்திவிட்டிருப்பதும் நியாயமானதல்ல. அந்த வீடுகளை அவர்கள் இடித்துத் தள்ளி, நெருப்பு வைத்தது சம்பந்தமான படங்கள் கூட இதோ இருக்கின்றன. உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும், அதிகமாகச் சாகுபடி செய்ய வேண்டும் என்று சொல்லப்படுகிற இந்த நேரத்தில் இப்படிப் போலீஸ்காரர்களை இரவோடு இரவாக அனுப்பி அந்த விவசாயக் குடும்பங்களுக்குத் துன்பம் விளைவித்திருப்பதை நான் முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்கள் ஹைக்கோர்ட்டில் ரிட் போட்டு ஒரு இன்ஜெங்ஷன் கூட வாங்கியிருக்கிறார்கள். ஹைகோர்ட்டார் அந்த உத்தரவில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால்--

'That an injunction do issue against the respondents herein restraining them from interfering with the possession of the members of the petitioner Sangam who are cultivating the land in the Vanavasi Pakkanadu Forest area.'